**இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை 2022 /2023**

---

இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனியின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவை தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலும், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியில் இருந்து 06 மாதங்களுக்குள் நிதிகூற்றுக்களை தயாரிப்பதற்காக பொறுப்புவாய்ந்த நபரால் உறுதிப்படுத்துகின்றமைக்கு கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் 2020/2021, 2021/2022, | 2019/2020 ஆண்டிற்குரிய நிதிகூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த ஆண்டின் கணக்காய்வு முடிவடையும் போது எதிர்வரும் ஆண்டுகளுக்குரிய நிதிகூற்றுக்களை கணக்காய்விற்கு | சட்டத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் கணக்குகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 2022/2023 மற்றும் 2023/2024 என்ற கணக்காண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 (2) (எ) பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நல்லாளுகைக்கான வழிகாட்டி மற்றும் செயற்பாட்டுக் கைநூலின் 4.2 ஆம் பிரிவு | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் வைத்திருந்தால் அக் கம்பனிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | 2019-2023 ஆம் ஆண்டுகளின் போது சேவையைப் பூர்த்தி செய்த 13 உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடை செலுத்துதல் 03 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை தாமதமாகி செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்ற நோயின் காரணமாக அந்தக் காலப்பகுதியில் வருமானம் உழைத்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக பணிக்கொடை செலுத்துதல் தாமதமடைந்தது. எனினும் தற்போது வரையிலும் அந்த நிலைமை அனேகமான அளவில் குறைக்கப்பட்டு பணிக்கொடை செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை செலுத்துதல் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2006 இன் 10 ஆம் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106, 113, 173(3) ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 08 ஆண்டுகளுக்குரிய குறித்துரைத்த பிரகாரம் வருமான வரி அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | தற்போது இதனை சரிசெய்து கொள்ளும் வகையில் ருமான வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வருமான வரி செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2002 இன் 14 ஆம் பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டத்தின் 10 ஆம் பிரிவு | புரள்வு காலாண்டிற்கு ரூபா 03 மில்லியன் அல்லது வருடாந்தம் ரூபா 12 மில்லியனை விஞ்சும் போது பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்யிருந்த போதிலும் கம்பனியின் காலாண்டின் புரள்வு ரூபா 50 மில்லியன் ஆக இருந்த போதிலும் பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | VAT இற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த செலுத்துதல்களை சரியான காலப்பகுதியில் மேற்கொள்வதற்காக தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 யூலை 14 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | எந்தவொரு விசேட பணிக்காகவும் பதவிநிலைத் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது ஆகக்கூடியது ரூபா 100,000 வரை செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்க முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக கமபனியால் 2023 ஆம் ஆண்டில் 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1.3 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | தற்போது முற்பணம் வழங்குதல் வரையறுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவை மற்றும் கைநூல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2.3 ஆம் பிரிவு | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் குறுங்கால, நீண்டகால தொலை நோக்குடன் முகாமைத்துவம் செய்வதற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் எதிர்வரும் நிதியாண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி | செயற்பாட்டுக் கைநூலில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் கம்பனியினால் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் வருடாந்த அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டுக் கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | செயற்பாட்டுக் கைநூலின் 6.7 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொருட்களுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் வருடத்தின் பின்னர் பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | துற்கோது பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டுக் கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 4.2.1 (அ) பந்தி | பெறுகைகள் நிறுவனத்தால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்யிருந்த போதிலும் கம்பனியால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.4.3 (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகள் | தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி மீளாய்வாண்டின் போது ரூபா 6,931,458 செலவில் பல்வேறு வழங்குனர்களிடமிருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்திருந்தது. | தற்போது கம்பனியின் பல்வேறு பிரிவுகளுக்காக வழங்குனர்களைப் பதிவு செய்து பெயர்ப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதுடன் அதற்கு இணங்க ஒவ்வொரு பிரிவிற்காகவும் பொருட்கள் அல்லது தேவையான மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு சிற்றுண்டிச் சாலையின் நாளாந்த வருமானமான ரூபா 6,222,340 கணக்காய்வுத் திகதி வரை வங்கியில் வைப்புச் செய்யப்படாதிருந்ததுடன் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறான மீதியும் காணப்படவில்லை. அதனால் இந்தப் பணம் தொலைந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டமையால் இந்த தொலைந்தமை தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவ்வாறு காணப்பட்ட மீதிகள் கையிலுள்ள காசாகக் காண்பிக்கப்படுகின்ற போதிலும் அந்த மீதியை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. | பணம் தொலைந்தமை தொடர்பாக முறையான விசாரணை நடாத்த வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1982 செப்டெம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 331 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சுயதொழில் வாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்தும் வகையில் தேவையான நிதியினை வழங்குதல் மற்றும் இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்குதல் இந்த கம்பனி | 1982 செப்டெம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 331 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சுயதொழில் வாய்ப்பு வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இளைஞர் சேவை அச்சகத்தின் நடவடிக்கைகள் ஆரம்ப படிமுறையாக | அமைச்சரவைத் தீர்மானம் கம்பயின் தற்போதைய பணிப் பொறுப்புக்களுக்கு இணங்குவதாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக தற்போது இளைஞர் சேவைகள் அச்சகம், இளைஞர் சேவைகள் பாதுகாப்பு அலகு, இளைஞர் சேவை சுத்திகரித்தல் பிரிவு, இளைஞர் சேவை சிற்றுண்டிச்சாலையாக கம்பனியால் 04 பிரிவுகள் அமுல்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஏனைய செயற்திட்டங்கள் முன்னாள் இருந்த பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கம்பனி 2013 ஆம் ஆண்டு முதல் 2023 வரை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது ரூபா 493,974 தொகையான பதிவு செய்தல் கட்டணம் மற்றும் ரூபா 750,000 வங்கி பிணை முறியும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்கி பணியகத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராக பதிவு செய்திருந்த போதிலும் எந்தவொரு இளைஞர் யுவதிகளுக்கும் அந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறு இருக்கும் போது 2021-2023 காலப் பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 3258 மாணவர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 40,474,000 வருமானம் பெறப்பட்டிருந்தது. | இளைஞர் சேவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த நிறுவனம் ஒன்றாக நடவடிக்கை எடுப்பதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பகிரங்க ஊடகம் மூலம் விளம்பரம் செய்து திறந்த அடிப்படையில் எந்தவொரு இளைஞர் அல்லது யுவதிக்கும் பங்குபற்றக்கூடிய வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைகள் மாகாண மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக உரிய நிறுவனங்களில் அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக கம்பனியின் உத்தியோகத்தரின் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் அவர்களுக்கு படிகள் செலுத்தி கம்பனியில் பதிவு செய்திருந்ததனர். | கம்பனியின் மூலம் சிற்றுண்டிச்சாலை மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இதுவரை அனுமதிப் பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் பாதுகாப்பு சேவை தொடர்பாக கம்பனியில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தரின் அனுமதிப் பத்திரத்தைப் பெற்று அதற்காக படியொன்று செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியினால் தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற சுத்திகரிப்பு, பாதுகாப்பு, அச்சிடல், சிற்றுண்டிச்சாலை போன்ற | இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது | பல்வேறு பிரிவுகளுக்காக தனித்தனியாக வருமானக் கூற்று |

| | | |
|---|---|---|
| பணிகளுக்காக தனித்தனியாக வருமானம் மற்றும் செலவினப் பகுப்பாய்வுக்கூற்று தயாரிப்பதற்கு பதிலாக அந்தப் பணிகளுக்காக 04 வங்கி நடைமுறைக் கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் பல்வேறு பிரிவுகளுக்காக வருமான செலவினப் பகுப்பாய்வுக்கூற்று தயாரிக்கப்படுகின்றது. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 17 மில்லியன் ஆகக் காணப்பட்ட வருடாந்த வருமானம் 2023/2022 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2.6 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அதனை சதவீதமாக எடுப்போமாயின் 15.2 வீதம் குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் அச்சகத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவம் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் மே மாதம் புதிய முகாமைத்துவத்தின் கீழ் உயர் நியமத்தையுடையதாக மீண்டும் அச்சிடல் இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களின் அறிக்கையிடலுக்காக உரிய அங்கீகாரத்துடன் உறுதிச்சீட்டுக்கள், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் விநியோகித்து கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு உரிய அங்கீகாரத்துடன் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுகள் தயாரிக்காமலும், காசேடு மற்றும் வங்கி இணக்கக்கூற்றுக்கள் உரிய பிரகாரம் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாமலும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | தற்போது காசேடு மற்றும் வங்கி இணக்கக்கூற்று உரிய பிரகாரம் நாளதுவரையாக பேணிச் செல்லப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் கணக்கீட்டு மென்பொருளில் உள்ளடக்குதல் உரிய அங்கீகாரத்துடன் மேற் கொள்ளப்படுகின்றது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அறிக்கைகளுக்காக முறையான பொறிமுறையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் சபையில் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கப்படுகின்ற உணவு பட்டோலைகளுக்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கும் போது வழங்கப்பட்ட அளவு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக விநியோகிக்கப்பட்ட அளவின் பிரகாரம் அலகின் விலை பட்டியலில் குறிப்பிடப்படாமல் மொத்த பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் பட்டியலின் பெறுமதி உள்ளபடியான பெறுமதியா என கணக்காய்வில் | எதிர்காலத்தில் இதனை சரி செய்வதற்கு தேவையான நடவடிகைகளை தயார்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சிற்றுண்டிச்சாலையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் கிரயம் கணிப்பீடு செய்யப்படாமல் பட்டியல் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023/2022 நிதியாண்டிற்குரிய சிற்றுண்டிச் சாலையின் நாளாந்த உணவு விநியோகித்தல் பதிவேட்டின் பிரகாரம் ஊடகப் பிரிவிற்கும் இளைஞர் சமூக சம்மேளனத்திற்கும் ரூபா 1,516,450 ஆன 10811 உணவு பக்கற்றுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான பட்டியல் சமர்ப்பித்து பணம் அறவிடப்படாமையின் காரணமாக கம்பனிக்கு அந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 மே 23 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை பட்டியல் விநியோகிக்கப்படாமல் நாளாந்த உணவுப் பட்டோலைக்கு புறம்பாக கம்பனியின் உயர் முகாமைத்துவத்தின் இரண்டு பேர்களுக்காக காலை, பகல் மற்றும் இரவு விஷேட உணவு பட்டியலின் பிரகாரம் உணவு வழங்கப்பட்டிருந்தது. | முன்னாள் இருந்த தலைவரினதும், முகாமைத்துவ பணிப்பாளரினதும் ஆலோசனையின் அடிப்படையில் அவ்வாறு பட்டியல் விநியோகிக்காமல் உணவு வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற முறைமையை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இளைஞர் சேவை (தனியார்) கம்பனியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி முதல் திசம்பர் வரை நிலுவைச் சம்பளம் செலுத்துவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் 2021 யூலை மாதம் ரூபா 5,982,100 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை உத்தியோகத்தர்களின் நிலுவை சம்பளம் செலுத்துவதற்காக பயன்படுத்தப்படாமல் கம்பனியின் சிற்றுண்டிச்சாலை நுகர்வு பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் தாபன நிருவாகச் செலவினங்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பாதுகாப்பு உத்தியோ கத்தர்களுக்காக செலுத்த வேண்டிய பணத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இளைஞர் சேவைகள் (தனியார்) கம்பனிக்காக கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் உதவிக் கணக்காய்வாளர் பதவியும் 2019 யூன் 03 ஆந் திகதி முதல் இதுவரை வெற்றிடமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கம்பனிக்காக நிரந்தர அடிப்படையில் கணக்காளர் ஒருவரை சேர்ப்பதற்காக | தற்போது உதவிக் கணக்காளர் பதவிக்காக நிரந்தர நியமனம் கிடைத்து நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | கணக்காளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முறையான பிரகாரம் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்காமை, இறுதி நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு கால ரீதியில் சமர்ப்பிக்காமைக்கு காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 16 ஆம் பிரிவுகளுக்கு முரணாக சேவையில் உள்ள ஊழியர்கள் தொடர்பாக சேவை வழங்குநரால் செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் குறித்துரைத்த பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 91,000 மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனியின் நிதி நிலைமை சிறந்த நிலையில் இல்லாதிருந்தமையால் ஊழியர் சேமலாப நிதியத்தை குறித்துரைத்த திகதியில் செலுத்துதல் தாமதம் டைந்திருந்தது. எதிர்காலத்தில் குறித்துரைத்த திகதியில் செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து மிகைக் கட்டணத்தை குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரிய பணத்தை குறித்துரைத்த திகதியில் அனுப்புதல் வேண்டும். |